**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, திருப்பூர்.**
**முன்னிலை:** திருமதி.ஜி.பாரதி பிரபா, பி.ஏ.பி.எல்.,
**(JO.Code: TN01448)**
நீதித்துறை நடுவர் எண்.1, திருப்பூர்.

2023-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ஆம் நாள் வியாழக்கிழமை

2053 திருவள்ளுவராண்டு சோபகிருது வருடம் ஆடி மாதம் 11-ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.719/2022**

**TNT11A-015138-2022**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திருப்பூர் இருப்புப்பாதை காவல் நிலையம்,
குற்ற எண். 53/2022 ... குற்றமுறையிடுபவர்

/எதிராக/

முனீஷ்வரன் (எ) ஒதப்பி, (வயது 20/2022)
த/பெ.குமரையா,
எண்.17-10,
ஜார்ஜ் ஜோசப் தெரு,
காமராஜபுரம்,
முனிச்சாலை ரோடு,
மதுரை. ... எதிரி

இந்த வழக்கானது 27.10.2022-ம் தேதியன்று நீதித்துறை நடுவர் எண்.1 திருப்பூர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.719/2022-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 24.07.2023-அன்று விசாரணைக்கு வந்து அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.கவிதா,B.A.,B.L., அரசு வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சக்திவேல்., B.Com., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், முன் வைக்கப்பட்ட இரு தரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>**தீர்ப்புரை**</u>

1) எதிரி மீது திருப்பூர் மாநகர இருப்புப்பாதை காவல் நிலைய குற்ற எண்.53/2022—ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:

கடந்த 17.04.2022—ஆம் தேதி இவ்வழக்கின் வாதி முத்துலிங்கம் என்பவர் கன்னியாகுமரியிலிருந்து கடப்பாவுக்கு செல்ல இரயில் வண்டி எண்.16382 புனே எக்ஸ்பிரசுக்கு டிக்கெட் முன்பதிவு செய்து S—6 கோச் சீட் நம்பர்—15 ல் பயணம் செய்து வந்த சமயம் வாதி சார்ஜரில் போட்டிருந்த அவரது OPP A—31 Fantasy White Colour செல்போனை எதிரி முனிஸ்வரன் (எ) ஓதப்பி என்பவர் வாதிக்கு நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் திருடிய குற்றத்திற்காக ச/பி.379 இ.த.ச—வின் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி, குற்ற இறுதி அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு கடந்த 27.10.2022—ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.719/2022— ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரி அழைப்பாணையின் பேரில் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு வழக்காவண நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 207—பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்குப் பின்னர் எதிரி மீது ச/பி.379 இ.த.ச—வின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அது பற்றி எதிரியிடம் விளக்கி கேட்டபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, வழக்கு அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அசா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5) <u>**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:**</u>

**அ.சா.1,** தனது சாட்சியத்தில் கடந்த 17.04.2022 ஆம் ஆண்டு 16382 என்ற பூனே எக்ஸ்பிரஸ் இரயிலில் கோச் நம்பர் S6 சீட் நெம்பர் 18 யில் பயணம் செய்து வந்ததாகவும் தான் தனது மொபைல் போனை இரயில் வண்டியில் உள்ள சார்சரில் போட்டுவிட்டு தூங்கிவிட்டதாகவும் ஈரோடு ஸ்டேசனில் இரயில் தாண்டிய பிறகுதான் பார்த்ததாகவும் சார்சரில் போட்டிருந்த தனது மொபைலை காணவில்லை என்றும் தனது மொபைல் ஓப்போ ஏ 31 வெள்ளை கலர் என்றும் பிறகு தான் கடப்பா வந்து விட்டதாகவும் பிறகு தான் 18.04.2022 ஆம் தேதி இதுசம்பந்தமாக புகார் எழுதி தபால் மூலம் அனுப்பிவைத்ததாகவும் பிறகு ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்தில் இருந்து தொலைபேசி மூலம் தகவல் தெரிந்து புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பதாகவும் சம்பவ இடம் காரணமாக திருப்பூர் இருப்பு பாதை காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்து விட்டதாக தகவல் சொன்னதாகவும் தன்னிடம் காட்டப்படும் புகார் நான் தபால் மூலம் அனுப்பியதாகவும் தன்னுடைய செல்போன் முனீஸ்வரன் என்பவரால் திருடப்பட்டதாகவும் அதை கண்டுபிடித்துவிட்டதாகவும் தகவல் சொன்னதாகவும் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக புகார் **அ.சா.ஆ.1** ஆகவும், செல்போன் **சா.பொ.1** ஆகவும்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.3,** தனது சாட்சியத்தில் கடந்த 14.05.2022 ஆம் தேதி திருப்பூர் இருப்பு பாதை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது ஈரோடு இருப்பு பாதை இரயில் குற்ற எண்.56/2022 சட்டப்பிரிவு 379 இதச பிரிவு கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை வழக்கு கோப்பு சம்பவ இடம் காரணமாக கோவை துணை கண்காணிப்பாளர் அவர்களால் அனுப்பப்பட்ட வழக்கு கோப்பினை பெற்று 16.05.2022 ஆம் தேதி திருப்பூர் இரயில் நிலைய குற்ற எண்.53/2022 சட்டப்பிரிவு 379 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் பின்பு சாட்சிகள் முத்துலிங்கம், ரகுவரன் ஆகியோர்களை விசரித்து வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும் பிறகு தான் பணி ஓய்வு பெற்றதால் உதவி ஆய்வாளர் அண்ணாதுரை வசம் வழக்கு கோப்பினை ஒப்படைத்ததாகவும் அவர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.2**, தனது சாட்சியத்தில் கடந்த 23.04.2022 ஆம் தேதி 13.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம் முத்துலிங்கம் என்பவர் பதிவு தபாலை பார்வையிட்டதில் அவர் கடந்த 17.04.2022 ல் இரயில் எண் 16382 பூனே எக்ஸ்பிரஸ் இரயிலில் கோச் நம்பர் S6 சீட் நெம்பர் 15 யில் பயணம் செய்து வந்தபோது திருப்பூர் ஈரோடு இரயிலில் தன்னுடைய ஓப்போ மொபைல் காணவில்லை என்று கொடுத்த புகாரின் அடிப்படையில் ஈரோடு இரயில்வே காவல் நிலைய குற்ற எண்.56/2022 சட்டப்பிரிவு 379 இதச கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும் அத்துடன் தனது செல்போனின் விபரத்தையும் குறிப்பிட்டு ஒரு சீட் அனுப்பியிருந்ததாகவும்

சம்பந்தமாக கடந்த 16.05.2022 திருப்பூர் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகவும், பயணச்சீட்டு **அ.சா.ஆ.3** ஆகவும், செல்போன் விபரம் அடங்கிய சீட் **அ.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.6,** தனது சாட்சியத்தில் கடந்த 21.07.2022 ஆம் தேதி திருப்பூர் இருப்பு பாதை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஈரோடு இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண்.56/2022 சட்டப்பிரிவு 379 இதச பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சம்பவ இடம் காரணமாக திருப்பூர் இருப்பு பாதை காவல் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட மேற்படி வழக்கு கோப்பினை திருப்பூர் இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண்.53/2022 சட்டப்பிரிவு 379 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வைத்திருந்ததாகவும் அவர் 30.06.2022 ஆம் தேதி பணி மூப்பு காரணமாக ஓய்வு பெற்று சென்றுவிட்டதால் தான் இவ்வழக்கினை தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.07.2022 ஆம் தேதி 08.30 மணிக்கு திருப்பூர் இரயில் நிலைய நடைமேடை 2 யில் தலைமைக் காவலர்கள் அல்லிமுத்து மற்றும் காவலர் சுரேஷ் குமார் சரிதம் சந்தேக நபர்களை கண்காணித்துக் கொண்டு வந்தபோது இரயில் நிலைய நடைமேடை 2 யில் பயணிகள் காத்திருப்பு அறையில் அமர்ந்திருந்த சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் ஒருவர் தங்களை பார்த்ததும் இருக்கையில் படுத்து தூங்குவதுபோல் நடித்தவரை சந்தேகத்தின் பேரில் விசாரிக்க அவர் முதலில் முன்னுப்பின் முரணாக பதில் சொல்லி பிறகு தனது பெயரை முனீஸ்வரன் என்கின்ற ஒதப்பி என்றும், மதுரை என்றும் சொன்னவரை சந்தேகத்தின் பேரில் பரிசோதிக்க

ஓபோ ஏ 31 செல்போன் ஒன்றை வைத்திருந்ததாகவும் அந்த செல்போன் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட செல்போன் என்றும் அதை அவர் தான் திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் அவரை கைது செய்து தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாக்கியராஜ், சண்முகம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டதாகவும் பிறகு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அவர் ஆஜர் செய்த செல்போனை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும் சாட்சிகள் பாக்கியராஜ், சண்முகம், அள்ளிமுத்து, முத்துலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து சட்டப்பிரிவு 379 ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலமாக படிவம்-91 **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.4,** தனது சாட்சியத்தில் 21.07.2022 அன்று காலை 9.00 மணிக்கு திருப்பூர் இரயில் நிலைய பிளாட்பார்ம் நம்பர் 2 யில் காத்திருப்பு அறையில் போலீசார் சோதனை செய்து கொண்டிருந்ததாகவும் அப்போது ஒரு நபரை பிடித்து விசாரித்ததாகவும் அவர் பெயர் முனீஸ்வரன் என்றும் அப்போது அவருடைய பாக்கெட்டில் இருந்து மொபைல்போன் ஒன்றை எடுத்ததாகவும் அவர் ஓப்போ வெள்ளை கலர் செல்போன் ஒன்று வைத்திருந்ததாகவும் அந்த செல்போனை பற்றி விசாரிக்க அவர் பூனே எக்ஸ்பிரஸ் இரயில் S2 கோச்சில் எடுத்ததாக சொன்னதாகவும் அவர் அந்த செல்போனை 17.04.2022 ஆம் தேதி எடுத்ததாக ஒப்புக்கொண்டதாகவும் அவர் சொன்னதை போலீசார் பதிவு செய்து தன்னிடமும் சண்முகத்திடமும் கையொப்பம் பெற்றதாகவும் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் பிறகு மொபைல் போனை பெற்றதற்காக தன்னிடம் கையொப்பம்

பெற்றதாகவும் எதிரி முனீஸ்வரனை பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலும் என்றும் எதிரி ஆஜரில் இல்லை என்றும் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலமாக ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.5,** தனது சாட்சியத்தில் 21.07.2021 அன்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை தானும் தன்னுடன் சுரேஸ் என்பவரும் திருப்பூர் இரயில்வே நடைமேடையில் ரோந்து அலுவலில் இருந்ததாகவும் தங்களுடன் உதவி ஆய்வாளர் அண்ணாதுரை என்பவரும் இருந்ததாகவும் திருப்பூர் இரண்டாவது நடைமேடையில் காலை சுமார் 08.00 மணிக்கு எங்களுடைய பணி ஆரம்பிக்கப்பட்டதாகவும் நடைமேடை இரண்டில் உள்ள வெயிட்டிங் காலில் ஒரு நபர் தூங்குவதுபோல் படுத்துக்கொண்டிருந்ததாகவும் தாங்கள் அவரை போய் பார்த்து எழுப்பியதற்கு அவர் தூங்குவதுபோல் நடித்து பேசியதாகவும் அவரை தாங்கள் பெயர் விலாசம் கேட்டதற்கு முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறியதாகவும் அவரிடம் அங்கு இருப்பதற்கான பிளாட்பார்ம் டிக்கட் இருக்கவில்லை என்றும் அவர் தன்னுடைய பாக்கெட்டில் ஒரு செல்போன் வைத்திருந்ததாகவும் அந்த செல்போனை பற்றி கேட்க முதலில் ஒன்றும் சொல்லவில்லை என்றும் அவர் தன்னுடைய பெயரை முனீஸ்வரன் என்று சொன்னதாகவும் செல்போனை பற்றி கேட்டதற்கு சொல்லாததால் சந்தேகத்தின் பேரில் அவரை காவல் நிலையம் அழைத்துச்சென்றதாகவும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபேது அவர் தன்னுடைய பெயரை முனீஸ்வரன் என்றும், தான் பூனே எக்ஸ்பிரஸ் S6 கோச்சில் திருப்பூரில் இருந்து ஈரோட்டிற்கும்

செல்வதற்கு இடையில் சார்ஜரில் இருந்த போனை திருடியதாக ஒப்புக்கொண்டதாகவும் அது வொயிட் கலர் ஒப்போ ஏ 31 போன் என்றும் மேற்படி செல்போனை ஐம்இஐ நம்பரை பரிசோதித்தபோது அது இந்த குற்ற எண்ணில் சம்பந்தப்பட்ட செல்போன் என தெரியவந்ததாகவும் உதவி ஆய்வாளர் அவரை விசாரித்ததாகவும் பிறகு உதவி ஆய்வாளர் விசாரித்து போனை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியபோதும், ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போதும் உடனிருந்ததாகவும் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். **அ.சா.6,** தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது ச/பி.379 இ.த.ச–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சி பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் பகுதிகளைத் தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, எதிரி அரசு தரப்பு சாட்சியத்தை பொய்சாட்சியம் என மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் முன்னிலைப் படுத்தப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7) இருதரப்பிலும் வாதம் கேட்கப்பட்டது.

8) <u>**தீர்வு காண வேண்டிய பிரச்சனை:**</u>

அரசு தரப்பில் எதிரி, வாதியுடைய OPPO A–31 FANTASY WHITE COLOUR செல்போனை வாதிக்கு நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் திருடிச்சென்றுள்ளார் என்ற ச/பி.379 இ.த.ச–வின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**பிரச்சனைக்குரிய தீர்வு,**

இருதரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள், வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

(i) இவ்வழக்கில், அ.சா.1 புகார்தாரர் ஆவார். அவர் மூலமாக அ.சா.ஆ.1 மற்றும் சா.பொ.1 ஆகியவகை குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவலர் ஆவார். அவர் மூலமாக அசா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.3, முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் மூலமாக அ.சா.ஆ.5 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.4, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி ஆவார். அவர் மூலமாக அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.5, திருப்பூர் இருப்புப்பாதை காவல் நிலைய தலைமைக் காவலர் ஆவார். அவர் விசாரணை அதிகாரி எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்கின் சொத்தை மீட்பதற்கு உதவியாக இருந்தது பற்றி குறிப்பிட்டுள்ளார். அ.சா.6, இறுதிகட்ட புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் மூலமாக அ.சா.ஆ.8 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) இவ்வழக்கில், அ.சா.1 தனது முதல் விசாரணையில், கடந்த 17.04.2022–ஆம் ஆண்டு 16382 என்ற பூனே எக்ஸ்பிரஸ் இரயிலில் கோச் நம்பர் S6 சீட் நெம்பர் 18 யில் பயணம் செய்து வந்ததாகவும் தான் தனது மொபைல் போனை இரயில் வண்டியில் உள்ள சார்ஜரில் போட்டுவிட்டு தூங்கிவிட்டதாகவும் ஈரோடு ஸ்டேசனை இரயில் தாண்டிய பிறகுதான் பார்த்ததாகவும் சார்சஜரில் போட்டிருந்த தனது மொபைலை காணவில்லை என்றும் தனது மொபைல் ஓப்போ ஏ 31 வெள்ளை கலர் என்றும் பிறகு தான் கடப்பா வந்து விட்டதாகவும் பிறகு தான் 18.04.2022 ஆம் தேதி இதுசம்பந்தமாக புகார் எழுதி தபால் மூலம் அனுப்பிவைத்ததாகவும் ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்தில் இருந்து தொலைபேசி மூலம் தகவல் தெரிந்து புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பதாகவும் சம்பவ இடம் காரணமாக திருப்பூர் இருப்பு பாதை காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்து விட்டதாக தகவல் சொன்னதாகவும் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையின்போது, இரயில் எந்த இடத்தில் வந்தபோது தனது போன் காணாமல் போனது என்ற விபரத்தினை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் ஈரோடு தாண்டிய பிறகு தான் முழிப்பு வந்து பார்த்தபோது போன் காணவில்லை என்றும் தான் இரயில் பெட்டியில் போனை சார்ஜ் போட்டிருந்த நிலையில் போன் காணாமல் போனால் தனது சக பயணிகள் தான் யாராவது போனை எடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, அவரது புகாரிலும், சாட்சியத்திலும் எதிரி தான் அவரது செல்போனை திருடிச்சென்றதாக அவர் குறிப்பிட்டு கூறவில்லை. இவ்வழக்கில், எந்த ஒரு சாட்சியும்

எதிரி அ.சா.1–ன் செல்போனை திருடிச்சென்றதை நேரடியாக கண்ணுற்றதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. அவ்வாறுள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளின் வாயிலாகவே வழக்குச் சம்பவம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய இயலும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு–25, பிரிவு–26 மற்றும் பிரிவு–27 னை பரிசீலனை செய்கையில்,

**இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு–25,**

"Confession to police-Officer not to be proved. -- No confession made to a police-officer, shall be proved as against a person accused of any offence.

**இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு–26,**

“Confession by accused while in custody of police not to be proved against him. -- No confession made by any person whilst he is in the custody of a police-officer, unless it be made in the immediate presence of a Magistrate, shall be proved as against such person. 4[E.planation.-- In this section “Magistrate” does not include the head of a village discharging magisterial functions in the Presidency of For St.George 5*** or elsewhere, unless such headman is a Magistrate exercising the powers of a Magistrate under the Code of Criminal Procedure.

காவல் அதிகாரியிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தையும் காவலர் காவலில் உள்ளபோது கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தையும் எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்த இயலாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

**இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு-27,**

**"How much of information received from accused may be proved:-** Provided that when any fact is deposed to as discovered in consequence of information received from a person accused of any offence, in the custody of a police officer, so much of such information, whether it amounts to a confession or not, as relates distinctly to the fact thereby discovered, may be proved."

ஆகவே, எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தகவலின் அடிப்படையில் விபரங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த அளவிற்கு மட்டும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கில் எதிரி கொடுத்த தகவலின் அடிப்படையில் வழக்குச்சொத்து கைப்பற்றப்படவில்லை. அவரிடமிருந்து நேரடியாக செல்போன்கள் கைப்பற்றப்பட்டதாக சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனர்.

(iii) இவ்வழக்கில், அ.சா.4 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி ஆவார். அவர் தனது முதல் விசாரணையில், 21.07.2022 அன்று காலை 09.00 மணிக்கு திருப்பூர் இரயில் நிலைய பிளாட்பார்ம் நம்பர்–2ல் காத்திருப்பு அறையில் போலீசார் சோதனை செய்து கொண்டிருந்தபோது ஒரு நபரை பிடித்து விசாரித்ததாகவும் அவர் பெயர் முனீஸ்வரன் என்றும் அப்போது அவருடைய பாக்கெட்டில் இருந்து மொபைல்போன் ஒன்றை எடுத்ததாகவும் அவர் ஓப்போ வெள்ளை கலர் செல்போன் ஒன்று வைத்திருந்ததாகவும் அந்த செல்போனை பற்றி விசாரிக்க அவர் பூனே எக்ஸ்பிரஸ் இரயில் S2 கோச்சில் எடுத்ததாக சொன்னதாகவும் அவர் அந்த செல்போனை 17.04.2022–ஆம் தேதி எடுத்ததாக ஒப்புக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையில், இரயில் நிலையத்தில் உள்ள

காத்திருப்பு அறையிலும் கண்காணிப்பு கேமிரா உள்ளது என்று சொன்னால் சரிதான் என்றும் தனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4, அவரது சாட்சியத்தில் எதிரி ரயில்வே பிளாட்பாமில் இருந்து செல்போனை திருடியதாக கூறினாரா அல்லது ரயிலில் ஏறி செல்போனை திருடியதாக கூறினாரா என்பது குறித்தோ, ரயில் எங்கு சென்று கொண்டிருந்தபோது செல்போனை அவர் திருடியதாக கூறினார் என்றோ சாட்சியமளிக்கவில்லை. எதிரியிடமிருந்து செல்போன் கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும் அவர் தெளிவுற குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எதிரியிடமிருந்து எங்கு வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்பது குறித்தோ, செல்போன் கைப்பற்றப்பட்டது என்பது குறித்தோ அவர் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மேற்படி, சட்டப்பிரிவுகளில் கூறியுள்ள வரையறைக்குள் இவ்வழக்கில், ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. அதன் அடிப்படையில் வழக்குச்சொத்தும் கைப்பற்றப்படவில்லை. ஆகவே, அ.சா.4 ன் முன்பாக எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அவர் முன்னிலையில் எதிரியிடம் செல்போன் கைப்பற்றப்பட்டது என்பதோ அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(iv) இவ்வழக்கில், வழக்குசம்பவமனது 17.04.2022–ஆம் தேதியன்று நடைபெற்றுள்ளது. அந்த சம்பவத்திற்கு சுமார் 96 நாட்களுக்கு பின்னிட்டே எதிரியிடம் இருந்து செல்போன் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரி அவர் செல்போனை திருடி அதை 96 நாட்களுக்கு அவர் கையிலேயே வைத்து சுத்திக் கொண்டுள்ளார் என்பது நம்பும் வகையில் அமையவில்லை.

(v) இவ்வழக்கில், புகார்தாரர் அவரது புகாரிலோ, சாட்சியத்திலோ அவரது செல்போனின் ஐ.எம்.இ.ஐ. எண் என்ன என்பது குறித்து குறிப்பிட்டு கூறவில்லை. அவர் அந்த செல்போனுக்கான ரசீதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆகவே, இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள செல்போன் அ.சா.1 உடையது தானா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. ஐ.எம்.இ.ஐ. எண்ணை குறிப்பிட்டு கூறாமல் பொதுவாக வெள்ளைக்கலர் ஓபோ ஏ.31 செல்போன் என்பது பலரிடத்தில் இருக்கக் கூடும். ஆகவே, அ.சா.1 ஐ.எம்.இ.ஐ. எண்ணை குறிப்பிடாத நிலையில் அது களவுபோன அவருடைய செல்போன் என்பதே சந்தேகத்திற்குரியதாக அமைந்துள்ளது.

(vi) இவ்வழக்கில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6, தனது சாட்சியத்தில் வழக்குச் சொத்தான மொபைல்போன் புகார்தாரருடையது என்பதை காட்டுவதற்கு புகார்தாரரிடம் இருந்து பில் எதையும் பெற்றேனா என்றால் இல்லை. என்றும் புகார்தாரர் இரயிலில் பயணம் செய்யும்போது எந்த இடத்தில் இரயில் வந்து கொண்டிருந்தபோது செல்போனை சார்ஜ் போட்டார் என்ற விபரத்தை கூறினாரா என்றால் கூறவில்லை என்றும் புகார்தாரர் எந்த பர்தத்தில் படுத்து பயணம் செய்தார் என்ற விபரத்தை புகாரிலோ தனது விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான் என்றும் சம்பவமானது இரவு 9.00 மணியில் இருந்து 10.00 மணிக்குள்ளாக நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில் அந்த நேரத்தில் அந்த கம்பார்ட்மெண்டில் இருந்த எல்லோரும் தூங்கியிருக்கமாட்டார்கள் என்றும், அந்த கம்பார்ட்மெண்டானது முன் பதிவு செய்யப்பட்ட பெட்டி என்பதால் அதற்குள்

மூன்றாம் நபர்கள் சென்று போனை எடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான் என்றும் புகார்தாரர் பயணம் செய்த பர்த் அருகே பயணம் செய்த மற்ற பயணிகளை இவ்வழக்கின் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியத்தின் மூலம் எதிரி S6 கம்பார்ட்மென்டில் பயணம் செய்திருந்தால் மட்டுமே அந்த செல்போனை திருடியிருக்க வாய்ப்புள்ளது என்பது தெரிய வருகிறது. எதிரி அந்த இரயிலில் பயணம் செய்ததாக நிரூபணம் செய்யும் வகையில், எந்த ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில், S6 கம்பார்ட்மென்டில் அ.சா.1 உடன் பயணம் செய்த மற்ற நபர்களை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை. அந்த சமயத்தில் அந்த ரயிலில் பயணம் செய்த நபர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டு இவ்வழக்கில், தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி முன்பதிவு செய்யப்பட்ட பெட்டியில் கோவையில் ஏறி ஈரோடு சென்று இறங்கியதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், டிக்கெட் பரிசோதகர் ரயிலில் சோதனை செய்து வரும் நிலையில் முன்பதிவு பெட்டியில் டிக்கெட் எதுவும் இல்லாமல் எந்த நபரும் பயணம் செய்ய இயலாது. அதை அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியும் உறுதிபடுத்தியுள்ளார். அவ்வாறுள்ள நிலையில், எதிரி S6 கோச்சில் ஈரோடு வரை பயணம் செய்தார் என அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளது நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. ஒப்புதல் வாக்குமூலமானது நடைமேடை இரண்டில் பதிவு செய்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் காவலரும், புலன் விசாரணை அதிகாரியும் காவல் நிலையத்தில்

வைத்தே ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில், அரசு தரப்பில் கூறியுள்ளதுபோல் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்பதும் நிரூபணம் செய்யப்படவில்லை. அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியவர்களது சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் ஒப்புதல் வாக்குமூலமானது காவல் நிலையத்தில் வைத்தே தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவரும் நிலையில், அந்த ஒப்புதல் வாக்குமூலமும் அரசு தரப்பில் கூறியுள்ளதுபோல் பதிவு செய்யப்பட்டது என்பதும் நிரூபணம் செய்யப்படவில்லை. ஆகவே, இவ்வழக்கின் சாட்சிகளின் வாயிலாக அரசு தரப்பில் எதிரி வாதியுடைய OPPO A-31 FANTASY WHITE COLOUR செல்போனை வாதிக்கு நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் திருடிச்சென்றுள்ளார் என்ற ச/பி.379 இ.த.ச-வின் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வரும் வழக்கில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

**Kailash Gour and others Vs. State of Assam** reported in **2012 AIR (SC) 786**, it has been held that,

> " Every accused is presumed to be innocent unless his guilt is proved. The presumption of innocence is human right subject to the statuary exceptions, said Principle forms the basis of Criminal jurisprudence in India" (para 21)

குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபணம் செய்யும் வரை எதிரியை நிரபராதி என்றுதான் கருத வேண்டும் என்றும், மேற்படி தீர்ப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிரிகள் சட்டப்பிரிவு ச/பி.379 இ.த.ச–வின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் செய்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட சங்கதிகளை அவர்களது தரப்பில் தெளிவுற நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,**

சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி, வாதியுடைய OPPO A–31 FANTASY WHITE COLOUR செல்போனை வாதிக்கு நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் திருடிச்சென்றுள்ளார் என்ற ச/பி.379 இ.த.ச–வின் கீழான குற்றச்சாட்டிற்கு எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248 (1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணையை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

அரசு தரப்பில் பி.ஆர்.எண்.88/2022, நாள்:05.09.2022–ல் குறியீடு செய்யப்பட்டுள்ள OPPO A–31 FANTASY WHITE COLOUR செல்போன் சி.எம்.பி.எண்.14650/2022, நாள்.21.12.2022–ல் மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதை மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டிற்கு பின்னரோ அல்லது மேற்முறையீடு காலத்திற்கு பின்னரோ அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. பிணையை ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2023–ம் ஆண்டு ஜூலை மாதம் 27–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

G BHARATHI PRABHA

Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2023.07.27 20:47:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திருப்பூர்

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 22.12.2022 | முத்துலிங்கம், வழக்கின் வாதி. |
| அ.சா.2 | 22.12.2022 | ரகுவரன், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவலர் ஆவார். |
| அ.சா.3 | 20.02.2023 | அப்புசாமி, முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரி ஆவார். |
| அ.சா.4 | 16.03.2023 | பாக்கியராஜ், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி ஆவார். |
| அ.சா.5 | 13.04.2023 | அல்லிமுத்து, திருப்பூர் இருப்புப்பாதை காவல் நிலைய தலைமைக் காவலர் ஆவார். அவர் விசாரணை அதிகாரி எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்கின் சொத்தை மீட்பதற்கு உதவியாக இருந்தது பற்றி குறிப்பிடுகிறார். |
| அ.சா.6 | 27.04.2023 | அண்ணாதுரை, இறுதிகட்ட புலன் விசாரணை அதிகாரி ஆவார். |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 08.04.2022 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 23.04.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3/அ.சா.2 | 16.04.2022 | பயணச்சீட்டு |
| அ.சா.ஆ.4/அ.சா.2 | 11.10.2021 | செல்போன் விபரம் அடங்கிய சீட் |
| அ.சா.ஆ.5/அ.சா.3 | 16.05.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6/அ.சா.4 | 21.07.2022 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7/அ.சா.4 | 21.07.2022 | கைப்பற்றுதல் மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8/அ.சா.6 | 21.07.2022 | படிவம்–91 |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

அரசு தரப்பு சான்று பொருள் : OPPO A–31 FANTASY WHITE COLOUR செல்போன்.

எதிரி தரப்பு சான்று பொருள் : இல்லை

<u>குறிப்பு:</u>

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.

2. எந்த சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. தீர்ப்பு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>நகல் சமர்ப்பிக்கப்பட்ட:</u>

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

G BHARATHI PRABHA

Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2023.07.27 20:47:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திருப்பூர்.